செ.வெ.எண் : 67/ மார்ச் நாள் : 31.03.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**வாக்குச்சாவடி அலுவலர்கள் தங்களது தபால் வாக்குகளை தேர்தல் பயிற்சி மையங்களிலேயே நேரில் செலுத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட பரமக்குடி, திருவாடானை மற்றும் இராமநாதபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இன்று (31.03.2021) நடைபெற்ற தேர்தல் பயிற்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப, அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு 06.04.2021 அன்று நடைபெற உள்ளது. தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் வாக்குப்பதிவிற்காக 1647 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாக்குச்சாவடி மையங்களில் மட்டும் தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று 7905 வாக்குச்சாவடி அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளனர். இவர்களுக்கு இதுவரை இரண்டு கட்ட தேர்தல் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இன்றைய தினம் மூன்றாம் கட்ட பயிற்சி வழங்கப்படுகிறது. தேர்தல் பணியில் ஈடுபடும் 7905 வாக்குவச்சாவடி அலுவலர்கள் மற்றும் 2472 காவல் துறை அலுவலர்களில் இதுவரை மொத்தம் 9,311 நபர்கள் தபால் வாக்கு கோரி விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கு பதிவு தபால் மூலமாக வாக்கு சீட்டுகள் அனுப்பும் பணிகள் 90 சதவிதம் நிறைவு பெற்றுள்ளன.

தேர்தல் பயிற்சி முடிந்ததும் அந்தந்த பயிற்சி மையங்களிலேயே அலுவலர்கள் தங்களது தபால் வாக்குகளை நேரடியாக செலுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக வேட்பாளர்கள்/வேட்பாளர்களின் முகவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேநேரத்தில் தபால் வாக்குகளின் இரகசிய தன்மையை பாதுகாத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 05.04.2021 அன்று நிறைவாக ஒரு தேர்தல் பயிற்சி நடத்தப்பட உள்ளது. அன்றைய தினமும் தேர்தல் அலுவலர்கள் தங்களது தபால் வாக்குகளை நேரடியாக செலுத்தலாம். மேலும், 01.05.2021 வரை அலுவலர்கள் தங்களது தபால் வாக்குகளை கட்டணமின்றி அஞ்லகம் மூலமாகவும் அனுப்பலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (இராமநாதபுரம்) சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., (பரமக்குடி) வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேல், (திருவாடானை) மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மரகதநாதன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.சா.சத்தியமூர்த்தி உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**